DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 94/2022
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

**பெயர்- பெருமாள்**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05/04/2023

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1.) எங்கள் தரப்பில் அனுப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி வாங்க மறுத்துவிட்டார். அறிவிப்புஅனுப்பபட்ட முகவரியில் எதிரி வசிக்கவில்லை என்றாலும் அறிவிப்பை பெற்றுயிருந்தால் உரிய பதில் அனுப்பியிருப்பார் என்றாலும் சரியல்ல. எனது மனைவி 5 மாதங்களாக ஆசிரியர் வேலைக்கு செல்கிறார். 5 மாதங்களுக்கு முன்னாடி அவர் எந்த வேலைக்கு செல்லவில்லை. பணத்தை நான் ரொக்கமாக கொடுத்தேன். எத்தனை தவனையாக கொடுத்தேன் என்றால் ஒரே தவனையாக கொடுத்தேன். பணம் கொடுப்பதற்கு முன்பு எத்தனை நாட்களுக்கு முன்பு பணம் கேட்டார் என்றால் 2 மாதங்களுக்கு முன்பு கேட்டார். எனது மகன் இலவச கல்வி உரிமை சட்டம் மூலமாக படிக்கிறான். எனது மகள் நியூ ரிவர் பள்ளியில் படிக்கிறாள். இலவச கல்வி என்பது ஏழைகளுக்கு இலவசமாக வழங்கபடுவது என்றால் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சலுகை ஆகும். நான் வறுமை கோட்டிற்கு கீழ் வசிப்பதாக சான்று வாங்கி கொடுத்துயிருக்கிறேன். இந்த வழக்கை தவிர வேறு வழக்குகள் மூலம் வேறு நபர்களிடமிருந்து ரூபாய் 60 லட்சம் வரவேண்டி உள்ளது. இந்த வழக்கில் 10 லட்சம் வரவேண்டியுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் எத்தனை முறை பணம் கேட்டேன் என்றால் பலமுறை கேட்டேன். தேதி ஞாபகமில்லை. எதிரி என்னிடம் கொடுத்த பாண்டை தேடி பார்த்தேன் கிடைக்கவில்லை. பணம் வாங்கியவர் பணத்தை திருப்பி கொடுத்தால் பாண்டை நான் திருப்பி கொடுத்துவிடுவேன். எதிரியிடம் பாண்டு இருந்தால் அவர் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதாக அர்த்தம் என்றால் தவறான பேப்பர் ஆகும். வழக்கு காசோலை எந்த ஒரு சட்டப்படியான கடனுக்காகவும் கடப்பட்டிற்காகவும் வழங்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வரதன் வாங்கிய கடனுக்காக சாட்சி கையொப்பம் போட்டதற்காக எதிரி மீது தவறான வழக்கு தாக்கல் செய்துயிருக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடைய கையொப்பம் இல்லை என்றாலும் நான் தவறான கையொப்பம் செய்துவிட்டு தவறாக வழக்கு தாக்கல் செய்துயிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் இந்த வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.